பிற்பகல் 1–15

4. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆ) அண்ணாமலை பல்கலைக்கழக கல்விக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சட்டப்படியாக அமைக்கப்பட்ட அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் கல்விக் குழுவிற்கு (*Academic Council*) 2 சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்குமாறு கோரிக்கை வரப்பெற்றுள்ளது.*

*அண்ணாமலை பல்கலைக்கழக கல்விக் குழுவிற்கு (*Academic Council*) விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். மேலும், தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக்காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு காலமாகும். தேர்ந்தெடுக்கப்பெற விரும்பும் வேட்பாளர்கள் தங்களின் வேட்புத்தாளினை 17–4–2023 பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். வேட்புத்தாள் வேண்டுவோர் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வேட்புத்தாள்கள் 18–4–2023 பிற்பகல் 3 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 19–4–2023 பிற்பகல் 3 மணிக்குள் தங்களது வேட்புத்தாளினைத் திரும்பப் பெறலாம்.*

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்நாளோடு அவ்வமைப்பில் அவர் வகித்துவரும் உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

செல்லத்தக்க வேட்புத்தாள்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், இந்த அமைப்புக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, தேர்தல் நடைபெறும். தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.